பக்கங்கள் 17+9

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 20 வியாழக்கிழமை 05.09.2024 | அதிர்வு 35

## மீனவ இளைஞர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மாதகல் கடலில் நேற்றுக் காணாமல் போன இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞனின் சடலமானது இன்று காலை கரையொதுங்கியதாக 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழ் மக்களை ரணில் முட்டாள்களாக்கியுள்ளார்

### ஆதங்கப்படுகின்றார் நாமல் ராஜபக்ஷ

### தமிழரசு பிளவுபட்டு விட்டது என்கிறார்

மாகாண சபை முறைமைகள் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மீண்டும் தனது மக்களைத் தோல்வியடைய செய்துள்ளது. ரணில் மீண்டும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளார்.

- பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு கூறியிருக்கின்றார்.

சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளதான் காரணமாக தமிழரசில் உட்கட்சிப் பிளவு வலுவாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் கூட்டிணைந்தே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டை போட்டனர் எனவும் நாமல் குற்றம்சாட்டினார். 04▶



# 13 ஐத் தடுத்தால் வட, கிழக்கில் தமிழர்களே மிஞ்ச மாட்டார்கள்

### சிறிதரனுக்கு அளித்த பதிலில் மனோ கணேசன் எச்சரிப்பு



(ந.லோகதயாளன்)

அரசமைப்பில்உள்ள13அமுல்படுத்துவதனையும் தடுத்தால் வடக்கு, கிழக்கில் வாழ தமிழர்கள் மிஞ்ச மாட்டார்கள். அப்போது சமஷ்டி கிடைத்தாலும் தமிழர்கள் இருக்காத நிலை காணப்படும் என தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனாதுபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு தமிழரசுக் கட்சிக்கு அவர் என்ன உத்தரவாதம் தந்தார் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். 04▶



# புலம்பெயர்ந்தவரிடம் ரிக்ரொக்கில் வீடியோ ஆசைகாட்டி பெருந்தொகைப் பணம் மோசடி; மூன்று பெண்கள் கைது

## யாழ்ப்பாணத்தில் நடந்த திருவிளையாடல்

இளம் பெண்ணின் ரிக்ரொக் வீடியோக்களைப் பார்த்து ஏமாந்த 52 வயதுடைய ஒருவர் 45 லட்சம் ரூபாவைப் பறிகொடுத்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

இந்த மோசடிச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தற்போது சுவிஸ் நாட்டில் வசிக்கின்றார். 52 வயதாகும் அவர் ரிக்ரொக்கில் நேரத்தைச் செலவிடுவது வழமை.

இந்த நிலையில் ரிக்ரொக்கில் உள்ள சுமார் 25 வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் பெயரில் அவருடைய வட்ஸ் அப் கணக்குக்கு ரிக்ரொக் வீடியோக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதையடுத்து அவர்கள் இருவரும் தொடர்பாடல்களை ஆரம்பித்துள்ளனர்.

ரிக்ரொக் கணக்கில் பதிவேற்றப்பட்ட படங்களும் சுவிஸில் உள்ளவருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவரும் தனது படங்களைப் பரிமாறிக்கொண்டுள்ளார்.

இந்தத் தொடர்பாடல் இறுக்கமடைந்த பின்னர், அந்தப் பெண் பல்வேறு தேவைகளைக் கூறி சுவிஸில் உள்ளவரிடம் பணம் பெற்றிருக்கின்றார்.

ரிக்ரொக் கணக்கு உள்ள அதே பெயரைக்கொண்ட வங்கிக் கணக்குக்கே இந்தப் பணப் பறிமாற்றம் நடந்திருக்கின்றது. சுவிஸில் உள்ளவரும் சுமார் 47 லட்சம் ரூபா வரையில் கொடுத்திருக்கின்றார்.

அதன் பின்னர் அந்தப் பெண்ணின்




தொடர்பாடல்கள் குறைய ஆரம்பித்துள்ளன. ஒரு கட்டத்தில் சுவிஸில் உள்ளவருக்கு சந்தேகம் ஏற்பட, அவர் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்ட தகவல்கள் அதிர்ச்சியளிப்பவையாக இருந்தன.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ரிக்ரொக்கில் உள்ள பெண்ணைக் கண்டுபிடித்து அவரிடம் விசாரணையை முன்னெடுத்தனர்.

விசாரணையில் அவருக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெரியவந்திருக்கின்றது. அதையடுத்து வங்கிக் கணக்கு இலக்கத்தை வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அரியாலையைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கைது செய்தனர்.

அந்தப் பெண்ணின் பெயரும், முதலெழுத்தும் ரிக்ரொக் கணக்கு வைத்திருக்கும் இளம்பெண்ணின் பெயர் முதலெழுத்தும் ஒன்றாக இருந்தன.

அவரது வங்கிக்கணக்குக்கே பணம் மாற்றப்பட்டுள்ளபோதும், சுவிஸ் நாட்டில் உள்ளவருடன் தொடர்பாடலை மேற்கொண்டவர் அவர் இல்லை என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

தொடர் விசாரணையில் 47 வயதுடைய மற்றொரு பெண் கைது செய்யப்பட்டார். அவரே சுவிஸ் நாட்டில் உள்ளவருடன் இளம் பெண் போன்று உரையாடிப் பணத்தைக் கறந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்தது.

அத்துடன், இவர்களின் 'அன்ரி' என்று அடையாளப்படுத்தப்பட்ட இன்னொருவருக்கும் பணம் அனுப்பப்பட்டுள்ளது. அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மூன்று பெண்களும் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள்.

ரிக்ரொக் பெண்ணின் பெயரும், தனது நண்பியின் பெயரும் ஒன்றாக இருப்பதைப் பயன்படுத்தி 47 வயதுப் பெண் இந்தத் திட்டத்தைத் தீட்டியுள்ளார். சுவிஸ் நாட்டில் உள்ளவர் முன்னொரு தடவை யாழ்ப்பாணம் வந்தபோது, கிடைத்த அறிமுகத்தைக் கொண்டே அந்தப் பெண் திட்டம் தீட்டிப் பணத்தை கறந்துள்ளமையும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, பணத்தை மீள வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். அதையடுத்து அவர்களைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

# மீனவரின் வலையில் சிக்கிய சிவலிங்கம்!

## பெரியநீலாவணையில் சம்பவம்

( வி.ரி.சகாதேவராஜா)

மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது வலையில் எதிர்பாராத விதமாக சிவலிங்கம் ஒன்று கிடைத்துள்ளது.

இச் சம்பவம் நேற்று பெரியநீலாவணையில் இடம்பெற்றுள்ளது.

கிடைக்கப்பட்ட சிவலிங்கம் மீனவர்களால் அதே பகுதியில் பொருத்தமான மரத்தடியில் வைக்கப்பட்டது .

அது தற்போது மக்களால் வழிபடப்பட்டு வருகிறது.







# யானைக் குட்டி சுட்டுக் கொலை

## தலையில் ஆறு சூடுகள்



மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள எலஹெர – கிரித்தல சரணாலயத்தில் சுற்றித் திரிந்த யானை குட்டி ஒன்று வேட்டைக்காரர் ஒருவரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக எலஹெர வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

6 அடி உயரமுடைய 6 முதல் 8 வயது மதிக்கத்தக்க யானைக் குட்டி ஒன்றே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளது.

மொரகஹகந்த – களுகங்கை வீதியில் நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள வீதிக்கு அருகாமையில் இந்த யானை குட்டி இறந்து கிடந்துள்ளது.

மேலும் ,யானைக்குட்டியின் தலையில் 8 தடவைகள் சுடப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எலஹெர வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதிக்கு சார்பாக ஆளுநர்கள் பிரசாரத்தில் என்று குற்றச்சாட்டுகள்

ஆளுநர்கள் அரசியல் சார்பற்று இயங்க வேண்டுமென்ற சட்ட நிபந்தனைகள் அரசமைப்பில் உள்ள போதிலும் பெரும்பாலான ஆளுநர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்துத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் எனத் தேர்தல் கண்காணிப்பு குழுக்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

பல ஆளுநர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக அரசியல் பிரசாரங்களில் தீவிரமாகப் பங்கேற்பதை அவதானிக்க முடிவதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் கூறுகின்றன.

குறிப்பாக வடமேல் ஆளுநர் நசீர் அஹமட், தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா, மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே, சப்ரகமுவ ஆளுநர் நவீன் திஸாநாயக்க, கிழக்கு



ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் வடமத்திய ஆளுநர் மஹிபால ஹேரத் ஆகியோர் பகிரங்கமாக மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதிலும் ஈடுபட்டுள்ளனர் எனவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.



# யாழ். - மதுரை விமான சேவை விரைவில் தினசரி நடைபெறும்

யாழ்ப்பாணத்தில் இருந்து மதுரைக்கு வாரத்தின் ஏழு நாள்களும் விமான சேவையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கை விமான சேவை அமைச்சகத்தால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக இந்தியாவிலிலுள்ள தனியார் விமான சேவை நிறுவனங்களுடன் இலங்கை விமான சேவை அமைச்சகத்தால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை - கொழும்பு இடையே சர்வதேச விமான சேவை கடந்த செப்டம்பர் 2012 முதல் இடம்பெற்று வருகின்றது.

தற்போது மதுரையிலிருந்து கொழும்புக்கு நேரடி விமான சேவையை இன்டிகோ ஏர்லைன்ஸ் (தினசரி) மற்றும் சிறிலங்கன் ஏர்லைன்ஸ் (SriLankan Airlines) வழங்கி வருகின்றன.

இந்நிலையில், செப்டம்பர் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனம் சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தினசரி விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

இந்த விமானம் 52 பயணிகளுடன் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.07 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தது.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் சென்னையிலிருந்து வந்த பயணிகளுக்கு மங்கல வாத்தியகள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மீனவ இளைஞர்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாதகல் பகுதியை சேர்ந்த நாகராஜா பகீரதன் என்ற 21 வயதுடைய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு இளைஞர்கள் நேற்று அதிகாலை கடற்றொழிலுக்கு சென்றுள்ளனர். இதன்போது அவர்கள் பயணித்த படகு திடீரென விபத்துக்குள்ளானது.

இந்நிலையில், படகில் பயணித்த ஒருவர் நீந்திக்கொண்டிருந்த வேளை அருகே வந்த படகின் உதவியுடன் காப்பாற்றப்பட்டுள்ளார்.

மற்றைய இளைஞர் காணாமல் போனார். இவ்வாறு காணாமல் போனவரின் சடலம் இன்று கரையொதுங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 23ஐத் தடுத்தால்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வைப்பவருக்கே ஆதரவு என தமிழ் அரசுக் கட்சி கூறி வந்த நிலையில், இப்போது சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு அவர் சஜித் என்ன உத்தரவாதம் தந்தார் எனக் கேட்கின்றனர்.

சஜித் தமிழ் அரசுக் கட்சிக்கு மட்டுமோ அல்லது தமிழ் கட்சிக்கு மட்டுமோ உறுதியளிக்கவில்லை. மாறாக நாடு முழுவதற்கும் உத்தரவாதம் அளித்துள்ளார்.

யாப்பில் உள்ள 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதாக அவர் உறுதியளித்தமை தமிழ்ப் பேசும் அனைவருக்கும் தந்த உத்தரவாதமாக இருக்கின்றது. தேர்தலை நடத்தி, வடக்கு கிழக்கில் நின்றுபோய் உள்ள மாகாண சபை அதிகாரங்களை மக்கள் பிரதிநிதிகளிடமே கையளிப்போம் என உறுதியளித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் பொருளாதார, அரசியல், கலாச்சார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதே குறிக்கோள். சமஷ்டி குறித்தொ பேசப்படவில்லை. இதில் இருந்து அடுத்த கட்டத்திற்கு நகர்வது கட்சிகளிடமே உள்ளது.

இதனை விடுத்து சஜித் சமஷ்டிக்கு உத்தரவாதம் தந்தாரா என்பதல்ல விடயம். சமஷ்டி நாடாக மாற்ற வேண்டும் என்பதே எனதும் தனிப்பட்ட விருப்பம். எனவே 13ஐ அமுல் செய்வது என்பதே ஏனைய முன்னணி வேட்பாளர்களை விட. சஜித் சிறந்த உத்தரவாதம். திடமான - உறுதியான - பேச்சை சஜித்தை தவிர வேறு எவரும் பேசவில்லை.

ஈழத் தமிழ் மக்களிடம் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். வடக்கு, கிழக்கில் உள்ள பெரிய சவால் தமிழ் மக்களின் சனத்தொகை வீழ்ச்சியாகும். இது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அவர்கள் இதனை கூறுவதில்லை. மாகாண சபையை உருவாக்கி ஓரளவு ஸ்திரத்தன்மையை உருவாக்கினால் ஓரளவு இதனை கட்டுப்படுத்த முடியும்.

அதனைவிடுத்து யாப்பில் உள்ள 13 அமுல்படுத்துவதனையும் தடுத்தால், வடக்கு - கிழக்கில் வாழ தமிழர்கள் மிஞ்ச மாட்டார்கள். அப்போது சமச்கிடி கிடைத்தாலும் தமிழர்கள் இருக்காத நிலை காணப்படும். - என்றார்.

### தமிழ் மக்களை...

மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டத்தில் திருத்தச் சட்டமூலத்தை விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு பொன்னான வாய்ப்பு காணப்பட்ட போதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இலங்கைத் தமிழரசுக்கட்சியும் தங்களின் சொந்த அரசியல் காரணங்களுக்காகத் அதனைத் தவறவிட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி பல்வேறு தருணங்களில் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றியும் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்து பற்றியும் அதிகமாகப் பேசுகின்றது, ஆனால் செயற்பாட்டில் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலை அக்கட்சியினர் கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த உண்மையை நான் சொன்னால், எனக்கு தமிழ் சினிமாத் திரைப் படங்களில் வரும் 'வில்லன்' போன்று முத்திரை குத்துகிறார்கள். ஆனால், தமிழ் மக்களின் உண்மையான வில்லன்கள் யார் என்பதை தமிழ் மக்கள் தற்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

ரணிலுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாக உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். நான் தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்கிறேன். ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை நம்பவைப்பதற்காக பொய்சொல்கிறார்.

மாகாண சபை முறைமைகள் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மீண்டும் தனது மக்களை தோல்வியடைய செய்துள்ளது. ரணில் மீண்டும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளார்.

இதேநேரம், இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் நீண்டகாலமான தலைமைக்கட்சி என்ற பாத்திரத்தினை இனி வகிக்க முடியாத நிலையை அடைந்துள்ளது.

அந்தக் கட்சியினர் சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினை எடுத்துள்ளதான் காரணமாக உட்கட்சிப் பிளவு வலுவாகியுள்ளது. தமிழ் மக்களுக்கான ஏகோபித்த தலைமையை அந்தக் கட்சியினால் வழங்க முடியாத பரிதாமான நிலைமையை அடைந்துள்ளது. - என்று நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.



# பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி புதிய அரசியல் கூட்டணி உருவாக்கம்

## ‘வெற்றிக் கிண்ணம்’ அதன் சின்னமாம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நோக்கில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வியாழக்கிழைமை கொழும்பு பத்தரமுல்லை வோட்டர் ஹேஜ்ஜில் இடம்பெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்தே இந்தக் கூட்டணியை உருவாக்கியுள்ளனர்.

புதிய கூட்டணியின் தலைவராக பிரதமர் தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். பொதுச் செயலாளராக அமைச்சர் ரமேஷ் பத்திரன நியமிக்கப்பட்டுள்ளார்.

நிகழ்வின் போது, புதிய கூட்டணியின் சின்னமாக “வெற்றிக் கிண்ணம்” சின்னம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எல்பிடிய பிரதேச சபைக்கான தேர்தலை வெற்றிக் கிண்ணம் சின்னத்தில் சந்திக்க உள்ளதாக அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய ரமேஷ் பத்திரன, கூறினார்.

இந்தக் கூட்டணி தொடர்பான ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மைக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொதுஜன ஐகிய முன்னணியின் செயலாளர் திஸ்ஸ யாப்பா ஜயவர்தன, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அமைச்சர் டிரான் அலஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சார்பில் சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசிய காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏ.எல்.எம். அதாவுல்லா, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அரவிந்த குமார், தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் அசாத் சாலி, தேசப்பற்றுள்ள மக்கள் சக்தி சார்பில் சுகத் ஹேவாவிதாரண ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, லசந்த அழகியவன்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபயவர்தன, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜீவன் தொண்டமான், மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் அசங்க நவரத்ன, எச்.எம். பௌசி உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் ஆளுநர்கள், புதிய அரசியல் கூட்டணிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணில் அரசின் நரித்தனம்

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு செய்திருக்கும் குள்ளநரித்தன நடவடிக்கை அப்பட்டமாக அம்பலமாகியிருக்கின்றது.

அதனைத் தேர்தல் ஆணையமே வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி விமர்சித்திருக்கின்றது.

அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் முடிவை இந்தக் கடைசி நேரத்தில் அரசாங்கத் தீர்மானமாக அறிவித்தமையையே தேர்தல் ஆணையம் விமர்சித்துள்ளது. இது ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் தெளிவான யுக்தி என்று தேர்தல் ஆணையம் முத்திரை குத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் இந்த நடவடிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, நாடு ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகி வரும் இந்தத் தருணத்தில் அரசாங்கம் அதனைச் செய்திருக்கக் கூடாது என வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கான இந்த அறிவிப்பை அரசாங்கம் ஏன் இவ்வள்வு தாமதப்படுத்தி தேர்தல் நெருங்கும் சமயத்தில் அதனை ஆரவாரமாக வெளியிட்டது என்றும் கேள்வி எழுப்பிய அவர், வரவிருக்கும் தேர்தலைக் குறிவைத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது என்றும் சொன்னார்.

இந்தச் சமயத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் முடிவு கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இது தேர்தல் வாக்களிப்பில் முறையற்ற வகையில் செல்வாக்குச் செலுத்துவதற்கான முயற்சி என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நடவடிக்கை தவறான முறையில் செல்வாக்குச் செலுத்தும் முயற்சி என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' நிலையத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இரண்டு மாதங்களுக்கு முன்னர் அரசாங்க ஊழியர்கள் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரிய போது அரசாங்கம் அவர்கள் மீது முழுக் கண்மூடித்தனமான பார்வையை செலுத்தியது, அவர்களின் கோரிக்கையை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை என்பது 'பவ்ரல்' நிலையத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுவதைக் காண்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியுள்ள 'பவ்ரல்' அமைப்பு, ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக - அதுவும் தபால்மூல வாக்களிப்புக்கு ஒரு நாள் முன்னதாக - இந்த அறிவிப்பு வெளியானமை என்பதுதான் கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்கள் 7 லட்சத்துக்கும் அதிகமானோர் நேற்று தொடங்கிய தபால் மூல வாக்களிப்பில் வாக்குகளை அளிக்க உள்ளனர்.

அவர்கள் வாக்களிக்க இருக்கின்ற சமயத்தில் முதல் நாளில் அவர்களுக்கு 25 வீத சம்பள உயர்வு கிட்டும் என்ற சாரப்பட அரச தீர்மானமாக முடிவு ஒன்று அறிவிக்கப்படுவது, அந்த அரசின் தலைவராக இருந்து கொண்டு இந்தத் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க என்ற வேட்பாளரை முறையற்ற விதத்தில் ஆதரிக்கச் செய்யும் முயற்சி என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்தத் தேர்தலுக்குப் பின்னர் அதன் முடிவு தேர்தல் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்கோ, விசாரணைக்கோ உரியதாக எடுத்துச் செல்லப்படுமானால், அந்த விசாரணையில் இந்த சம்பள அதிகரிப்பு பற்றிய அரசின் அறிவிப்பும் அது தொடர்பில் தேர்தல் ஆணையம் சுயாதீனமாக வெளியிட்ட கருத்தும் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# இளைஞர்களின் பாவனைக்கு கையளிக்கப்படாமலேயே துருப்பிடித்து அழியும் சாய்ந்தமருது கரப்பந்தாட்டத் திடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டு துறைசார் நிபுணர்களின் ஆலோசனை பெறப்படாமல் சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கரப்பந்தாட்ட மைதானத்தின் சுற்று வேலியும் கரப்பந்தாட்ட இரும்பு கம்பியும் துருப்பிடித்து அழியும் நிலைக்கு உள்ளாகி வருகின்றன.

நாட்டின் சகல பகுதிகளிலும் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பிரபல்யம் படுத்தும் வகையில் கிராமத்துக்கு ஒரு கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கும் திட்டத்தில் அடிப்படையில் சாய்ந்தமருதில் இந்த மைதானம் அமையப் பெற்றுள்ளது.

சாய்ந்தமருதில் கரப்பந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடம் இருந்தும் மிகவும் நெருக்கமான இடத்தில் தற்போதய மைதானம் அமைய பெற்றுள்ளது.

சூரிய ஒளியின் தாக்கத்தை தவிர்க்க வடக்கு தெற்காக அமைய வேண்டிய மைதானம் கிழக்கு மேற்காக அமைய பெற்றுள்ளதால் காலையிலும் மாலையிலும் இம்மைதானத்தை பயன்படுத்த முடியாதுள்ளதாக விளையாட்டு துறை சார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை கரப்பந்தாட்டம் விளையாடும் எல்லை சீமெந்து கட்டாக அமைந்திருப்பதால் விளையாடும் போது வீரர்கள் உபாதைக்குள்ளாகும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது.

மக்களின் பாவனைக்கு இன்னும் கையளிக்கப்படாத இந்த மைதானத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து பொருத்தமான இடத்தில் அமைக்குமாறு பிரதேச விளையாட்டு வீரர்கள் கேட்டுள்ளனர்.

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பக் கருத்தரங்கு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அமெரிக்கா இன்ரல் நிறுவனத்தில் சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானியாக கடமையாற்றும் இரத்னேஸ்வரன் வன்னிதம்பி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்துக்கு வருகை தந்து கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தினார்.





பாடசாலையின் முதல்வர் எம். சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றிய மாணர்வர்கள், வலையமைப்பு தொழிநுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறி தொழினுட்பம் பற்றியும் பல்வேறு விடயங்களை மிகுந்த ஆர்வத்துடன் அறிந்து கொண்டனர்.

அத்துடன் குறித்த துறைகளில் வினாக்களைக் கேட்ட மாணவர்களுக்கு விஞ்ஞானியால் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ள தபால் வாக்களிப்பு







**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

ஜனதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தற்போது தபால் வாக்களிப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூலமாக வாக்களிப்பு சாய்ந்தமருது பிரதேச செயலகத்திலும் இடம் பெற்றது.






# பொத்துவில் ஆதார வைத்தியசலையில் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு

## அமைப்பது தொடர்பாக உயர்மட்டக் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவில் ஆதார வைத்தியசலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. அது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று புதன்கிழமை (04) பொத்துவில் ஆதார வைத்திய சலையில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், இலங்கை சுற்றுலா அதிகார சபையின் உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், ஆகியோரின் பங்கேற்புடன் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகளான டாக்டர் நித்தின் ரணவக்க, டாக்டர் ஏ.பி.மசூத், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் பொறியியலாளர் ஏ.எம்.ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து உயர்மட்ட குழுவினர் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப்பிரிவு அமையவுள்ள இடங்களையும் பார்வையிட்டனர்.

பொத்துவில் ஆதார வைத்திய சாலையில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அறுகம்பே பிரதேசத்துக்கு வருகைதரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெரிதும் நன்மையடைவதுடன், எமது நாட்டுக்கும் பெரும் வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்ற ஒரு நிறுவனமாகவும் பொத்துவில் வைத்தியசாலை திகழும் என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கை சுற்றுலா அதிகார சபை குறித்த கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு வசதியை ஏற்படுத்துவதற்கு நிதி யுதவி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# அரசியல் பயில்வோரிடம் நாட்டைக் கொடுக்க முடியாது

## ரணிலே பொருத்தமானவர் என்கிறார் ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம் முஸ்தபா

(நூருல் ஹுதா உமர்)

தனியாளாக நாடாளுமன்றம் நுழைத்த ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக மாறி மிகக்குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டார். பின்தங்கிய நிலையில் மூச்சுவிட கூட கஷ்டப்பட்ட நாட்டை தனது அனுபவம், அரசியல் முதிர்ச்சியைக் கொண்டு கட்டியெழுப்பினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கு வாக்களிப்பதை விடவும் கடந்த இரண்டாண்டுகளில் மக்களுக்கு அவர் செய்த சேவைக்கு நன்றி கடன் செலுத்தும் விதமாக வாக்களிக்க வேண்டியது தார்மீகக் கடமையாகும் என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,




ஏனைய வேட்பாளர்களுக்கு செல்வது போலல்லாது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளும் "இயலும் ஸ்ரீலங்கா" பிரச்சார கூட்டத்துக்கு அதிக மக்கள் விருப்பத்துடன் படையெடுத்து செல்கிறார்கள். நாட்டை நேசிப்பவர்கள் என்ற வகையில் எமது நாட்டை சிறப்பாக எதிர்காலத்தில் வழிநடத்த கூடியவர் யார் என்று நோக்கினால் அது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

புவியியல் ரீதியாக முக்கிய இடத்தில் இலங்கை அமைந்திருப்பதால் தமது தேவைகளை சரிவர செய்து கொள்ள இலங்கை பல நாடுகளுக்கும் தேவையான ஒரு நாடாக அமைந்துள்ளது. அதனால் இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க பல நாடுகள் முயற்சித்து வருகிறது. அதனால் இலங்கையை சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் இயங்க விடாமல் தடுக்கும் வழிவகைகளை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறார்கள். ஆகவே ரணில் வென்றால் இலங்கைக்கு அவர் சிறந்த ஜனாதிபதியாக திகழ்வார். அதேநேரம் ஏனையவர்கள் வென்றால் ஏனைய நாடுகளுக்கு அவர் சிறந்த ஜனாதிபதியாக திகழ்வார். இதுவே வெளிப்படையான உண்மையாகும்.

முக்கிய அமைச்சுக்களின் அமைச்சராக, பிரதமராக, எதிர்க்கட்சி தலைவராக, ஜனாதிபதியாக இருந்த அனுபவம் கொண்ட ரணிலுக்கு எந்த சூழ்நிலையில் எப்படி நாட்டை கொண்டு நடத்த வேண்டும் என்ற அனுபவம் இருக்கிறது. அனுபவமற்றவர்களால் நாட்டையோ அல்லது ஏனைய அந்நிய நாடுகளுடனான உறவையே சரியாகக் கொண்டு நடத்த முடியாது. நாட்டின் இன்றைய சூழ்நிலை அரசியல் பயிலுனர்களுக்கு நாட்டை ஆழ கொடுக்கும் சூழ்நிலை இல்லை.- என்றார்.




# சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலய மாணவருக்கு தொழில்நுட்பசார் பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நவீன தொழில் நுட்பத்தை நோக்கி பாடசாலை மாணவர்களை உயர்கல்வித் துறையில் ஊக்குவித்து அவர்களை மேலும் பயிற்றுவித்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலய மாணவர்களுக்கு துறைசார் வளவாளர்களைக் கொண்டு பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை ஸ்டேன்ட்போட் நிறுவனம் அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்திருந்தது.






# மன்னாரில் மந்தகதியில் தபால் மூல வாக்களிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் பொது தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு நேற்றும் இன்றும் இடம்பெற்றது.

தபால் மூல வாக்களிப்புக்கு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள அரச திணைக்களங்களில் இன்று (5) காலை தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்குகளை செலுத்தி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்த வரையில் அதிகாலை தொடக்கம் வாக்கு பதிவுகள் மந்த கதியில் இடம் பெற்று வருவதுடன் அரச அதிகாரிகள் வாக்களிப்பில் ஆர்வம் இல்லாமல் காணப்படும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளக் கூடிய தபால் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 712,319 ஆகும்.

தகுதி உள்ள வாக்காளர்கள் அனைவரும் தபால் வாக்களிப்பில் கலந்து கொண்டு வாக்களிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

# அம்பாறை ஆறுகளில் முதலைகளின் தொல்லை

## பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஆற்றை அண்டிய பிரதேசம், வயல் பிரதேசம் மற்றும் சாய்ந்தமருது கரைவாகு வட்டை பிரதேசம் ஆகியவற்றில் பகலிலும் இரவிலும் முதலைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆறு , குளம் , குட்டைகளில் வசித்து வந்த முதலைகள் வெள்ளநீர் காரணமாக அந்த நீரோட்டத்தின் காரணமாக இந்தப் பிரதேசங்களில் சர்வ சாதாரணமாக முதலைகள் உலவித் திரிகின்றன. இவை ஊருக்குள் காணப்படும் மறைவான இடங்களில் பகல்வேளையில் தங்கியிருந்து இரவு வேளைகளில் கோழி மற்றும் ஆடுகளை வேட்டையாடி வருகின்றன.

ஆறுகள், குளங்கள், குட்டைகள் மற்றும் நீரோடைகளில் நீராடுவோர் மற்றும் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவோர் மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளனர்.

முதலைகளின் தொல்லையால் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டு வருவதோடு பெண்களும், சிறுவர்களும், முதியோர்களும் பெரும் அச்சத்துடனேயே இரவு வேளையைக் கழிக்க வேண்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.



# கோமாரி பிரதேச வைத்தியசாலைக்கு கல்முனை சுகாதாரப் பணிப்பாளர் குழு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பொத்துவில் பிரதேசத்தில் அமைந்துள்ள கோமாரி பிரதேச வைத்தியசாலைக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் தலைமையிலான குழுவினர் அண்மையில் (03) விஜயம் செய்திருந்தனர்.

வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த கள விஜயம் அமைந்திருந்தது.

இந்தப் பிரதேசத்திலுள்ள நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் ஆதார வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வைத்தியசாலைக்கு தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வாரத்தில் ஒன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு பற்சிகிச்சைப் பிரிவொன்றையும் ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளார் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.



# அம்பாறை மாவட்ட இளைஞர், யுவதிகளை ஊடகத்துறையில் வலுவட்டும் செயலமர்வு

அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா யுனைட்ஸ் செயற்பாட்டு நிலையம் ஒழுங்கு செய்திருந்த ஊடகக் கல்வியறிவு மற்றும் விமர்சன சிந்தனை பற்றிய செயலமர்வு அம்பாறை செயற்பாட்டு நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

நம்பகமான தகவல் தொடர்பு ஆதாரங்களை நம்பத்தகாத தகவல் தொடர்பு மூலங்களில் இருந்து வேறுபடுத்தி அறியவும், தவறான தகவல்களைப் பரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்களைப் புரிந்துகொள்ளவும், சமூகத்தில் உள்ள தவறான தகவல்களைக் கண்டறிந்து அது பரவுவதைத் தடுப்பது தொடர்பாக ஊடகவியலாளர்களின் கடமை தொடர்பில் இந்த செயலமர்வில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த செயலமர்வில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப்பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூவின இளைஞர் யுவதிகளும் பங்கேற்றனர்.



# கல்முனை அல் மிஸ்பாஹ்வின் சர்வமத கலாச்சார நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய தரம் 04 மாணவர்களின் பல்வேறு சமய, கலாச்சார ஆடைகளையும் பண்டிகைக்கால உணவுகளையும் அறிந்து கொள்வோம் எனும் கருப்பொருளுடன் கூடிய நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.அப்துல் றஸாக் தலைமையில் ஆரம்பப் பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்கான உதவி அதிபரும் பகுதித் தலைவருமான எஸ்.ஜுனைதீன் வழிகாட்டலில் தரம் 04 வகுப்பாசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலில் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் மாணவர்களின் பூரண ஈடுபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் லண்டனில் வெளியீடு!

ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் லண்டனில் வெளியிடப்படவுள்ளது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்களே இவ்வாறு வெளியிடப்படவுள்ளது.

லண்டன் ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 04மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை இங்கிலாந்து சைவ மன்றங்களின் காப்பாளர் சிவா தம்பு வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த ஆவணக்காப்பாளர். பத்மநாப ஐயர், மற்றும் சி.கிருபாகரன், சண்முகதாசன் ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை பா. நடேசன் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை நா. சபேசன் ஆற்றுவார்.

தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் நூலின் அறிமுகவுரையை டாக்டர வே. ரவிமோகன் ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கோவிலூர் செல்வராஜன் ஆற்றுவார்.

அத்துடன் இந்த நூல் வெளியீட்டில் ஈழத்து சிற்றிதழ்கள் பற்றிய சிறப்புரையை திருமதி மாதவி சிவலீலன் வழங்குவார்.

லண்டன் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களின் நலன் பாதிக்கப்படும்!

## இம்ரான் எம்.பி. இப்படித் தெரிவிப்பு

**(அபு அலா)**

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களின் நலன் வெகுவாகப் பாதிக்கப்படும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

தேசிய மக்கள் சக்தியில் நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடிய செல்வாக்குள்ள முஸ்லிம்கள் யாருமில்லை. அவர்கள் கூறுவது போல ஆட்சியமைத்தாலும் அவர்களது அமைச்சரவையில் பொறுப்புள்ள முஸ்லிம்கள் யாருமிருக்க மாட்டார்கள். இதனால் முஸ்லிம்கள் நலன் சார்ந்த விடயங்கள், பண்பாடு, கலாசாரம் சார்ந்த விடயங்களை பேச அங்கு யாரும் இருக்க மாட்டார்கள். இது முஸ்லிம் மக்களுக்கு பாரிய இழப்புகளை ஏற்படுத்தும்.

ஜனாதிபதி கோட்டபாயவின் அமைச்சரவை மூலம் இதனை நாம் தெளிவாக



அறிந்து கொண்டோம். முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது கோத்தபாயவின் அமைச்சரவையில் எடுத்துக் கூறி அதனைத் தடுக்கக் கூடியவர்கள் யாரும் இருக்காமை நமக்கு நல்ல உதாரணமாகும்.

இதுபோன்ற நிலைமையே தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தாலும் உருவாகும். தேசிய மக்கள் சக்தியில் உள்ளவர்களுக்கு முஸ்லிம் கலாசார பண்பாட்டு விடயங்கள் தெரியாது. இஸ்லாம் சிறுவர்களை திருமணம் செய்யுமாறு வலியுறுத்தவதாக பிமல் ரத்நாயக்க கூறியுள்ளார். இதே போல அக்கட்சியில் உள்ள இன்னும் சிலரும் இஸ்லாம் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

சிலவேளை முஸ்லிம்களை தமது கட்சியில் உள்வாங்கியுள்ளோம் என்று காட்டுவதற்காக முஸ்லிம் பெயர் தாங்கிய சிலரை தேசியப் பட்டியல் ஊடாக அவர்கள் உள்வாங்கலாம். அதுவும் ஆபத்தானதுதான். கடந்த காலங்களில் அவர்கள் உள்வாங்கிய முஸம்மில் முஸ்லிம்கள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களை நாம் இன்னும் மறக்கவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் முஸ்லிம்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு முஸ்லிம்கள் தமது வாக்குகளை அளிக்க வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு அடுத்தவர் வார்த்தைகளை நம்பி ஏமாந்து விடக் கூடாது. நமது கையால் நமது கண்களை குத்திக் கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கிட விடக்கூடாது.- என்றார்.





# பட்டிருப்பு வலய முறைசாரா பிரிவால் உணவு மையம் அமைத்தல் பயிற்சி!

**(பழுவூரான்)**

பிரதேசத்திலுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தி செய்யும் மையத்தை பாடசாலையில் அமைத்து, தொழில் பயிற்சியையும் சுயதொழில் வாய்ப்பையும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரனின் வழிகாட்டலில் முறைசாராக்கல்விப் பிரிவின் இணைப்பாளர் றீற்றா கலைச்செல்வனின் ஒழுங்குபடுத்தலில் மட்டக்களப்பு பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தில் இயற்கை உணவு உற்பத்தி மையம் அமைத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை நேற்று புதன்கிழமை (05) இடம்பெற்றது.

இதன்போது பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட பசும்பாலில் இருந்து வட்டிலப்பம், புடிங், யோகட், ஜெலி, ஐஸ்



கிறீம் போன்ற உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியின் வளவாளர்களாக கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்புக் கிளையின் மாவட்ட மேம்படுத்தல் அதிகாரி என்.கோகுலதாஸ், பயிற்சியாளர்களான ஏ.ஜி.எம். பரீட், இ.டி.யு.கமகே, வாழ்க்கைத் தேர்ச்சி வளவாளர்களான என்.டினேஸ்குமார், எஸ்.ஜெயரூபன்,வறண்டா வியாபார அபிவிருத்தி அதிகாரி நிறுவனம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாடசாலையின் அதிபர் சீ.யோகேஸ்வரன், தொழில் கல்விப் பிரிவு பொறுப்பாசிரியை திருமதி வனிதா ஆகியோர் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தில் தொழில் கல்விப் பிரிவில் கற்கும் 30 மாணவர்கள் பங்குபற்றி குறித்த விடயத்தில் தேர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# கண்டெடுப்பு!

## 50 அடி பள்ளத்துள் சிக்கியவரின் மண்டையோடு ஒன்பது மாதங்களின் பின் வெளித்தெரிந்தது

வேளச்சேரியில் 50 அடி பள்ளத்தில் கட்டடம் இடிந்து விழுந்ததில் சிக்கி உயிரிழந்த தொழிலாளி ஒருவரின் மண்டை ஓடு 9 மாதங்களுக்குப் பின்னர் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சென்னை, வேளச்சேரியில் கடந்த வருடம் டிசம்பர் 4ஆம் திகதி கியாஸ் பங்க் அருகே ஐந்து பர்லாங்க் வீதிச் சந்திப்பில் கட்டுமானப் பணிகளுக்காகத் தோண்டப்பட்ட 50 அடி பள்ளத்தில் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது.

அந்தக் கட்டடத்திற்குள் 10க்கும் மேற்பட்டோர் சிக்கியிருந்தனர் எனத் தகவல் வெளியானது. தகவல் அறிந்து வந்த தேசிய பேரிடர் மீட்புப் படையினர் 10 பேரை மீட்டனர்.

அதேசமயம் 50 அடி கட்டுமானப் பள்ளத்தில் வெள்ளம் புகுந்து சகதியில் சிக்கிக் கொண்ட நரேஷ் மற்றும் ஜெயசீலன் ஆகியோரை 100 மணி நேர போராட்டத்திற்குப் பின் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் சடலமாக மீட்டனர்.

அதேபோல், கட்டுமானப் பணி நடைபெற்ற இடத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ராகுல் பக்டி, தீபக் பக்டி ஆகியோரில் ராகுல் பக்டி பொதுமக்களால் மீட்கப்பட்டார். தீபக் பக்டி என்ன ஆனார் என்று தெரியாமல் இருந்தது.

இது தொடர்பாக கிண்டி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் அந்த இடத்தில் தற்போது கட்டுமானப் பணி மீண்டும் தொடங்கி நடைபெற்று வருகிறது.

கட்டுமானப் பணி நடைபெறும் இடத்தின் அடித்தளப் பகுதியில் எலும்பு, மண்டை ஓடு தென்பட்டுள்ளது.

பின்னர் தகவல் அறிந்து அங்கு வந்த கிண்டி பொலிஸார், அங்கிருந்த எலும்புகளை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

“அது கட்டட விபத்தில் மாயமான தீபக் பக்டியின் எலும்புக் கூடாக இருக்கலாம்” என பொலிஸார் தெரிவித்தனர்,

எனினும், மருத்துவ சோதனைகள் முடிந்து மருத்துவர்கள் முறைப்படி தெரிவிப்பார்கள்” எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# படக்குழுவினருடன் ‘த கோட்’ முதல் காட்சி பார்த்த விஜய்!

இயக்குநர் வெங்கட்பிரபு இயக்கத்தில் நடிகர் விஜய், தி கோட் படத்தில் நடித்துள்ளார். ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தில் பிரசாந்த், பிரபுதேவா, யோகிபாபு, சினேகா, லைலா, மீனாட்சி சௌத்ரி உள்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

இந்நிலையில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் “தி கோட்” திரைப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

தமிழகத்தை தவிர மற்ற மாநிலங்களில் முதல் காட்சி காலை 4 மணிக்குத் தொடங்கியது. அதிகாலை முதலே ரசிகர்கள் திரையரங்குகளில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் முதல் காட்சி காலை 9 மணிக்குத் தொடங்கியது.




இந்நிலையில், நடிகர் விஜய் “தி கோட்” படத்தைத் தனது குடும்பத்ினர் மற்றும் படக்குழுவினருடன் இணைந்து பார்த்துள்ளார். அவருடன் இயக்குநர் வெங்கட் பிரபு மற்றும் யுவன் சங்கர் ராஜா ஆகியோர் இணைந்து படத்தைப் பார்த்துள்ளனர். பின்னர் விஜய், படம் சிறப்பாக அமைந்ததற்காக இயக்குநர் வெங்கட் பிரபு மற்றும் யுவன் சங்கர் ராஜாவை வெகுவாகப் பாராட்டியுள்ளார். இந்தப் புகைப்படம் இணையத்தில் பரவி வைரலாகி வருகிறது.

மேலும் திரிஷா, கீர்த்தி சுரேஷ், சிவகார்த்திகேயன் உள்ளிட்ட சினிமாப் பிரபலங்களும்படத்தின்முதல்காட்சியை திரையரங்குகளுக்கு நேரில் சென்று ரசிகர்களுடன் பார்த்துள்ளனர்.



# இந்தியாவில் பல சிங்கப்பூர்கள்

## உருவாக்க மோடி விருப்பம்

"சிங்கப்பூர் வெறும் நாடு மட்டும் இல்லை. வளர்ந்து வரும் ஒவ்வொரு நாடுகளுக்கும் ஊக்கமளிக்கும் சக்தியாகவும் சிங்கப்பூர் உள்ளது. இந்தியாவிலும் பல சிங்கப்பூர்களை உருவாக்க நாங்கள் விரும்புகிறோம்." என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.


சிங்கப்பூர் சென்றுள்ள இந்தியப் பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமர் லாரன்ஸ் வோங்கைச் சந்தித்துப் பேசினார். பின்னர் சிங்கப்பூர் பிரதமருடனான உயர்மட்டக் குழுவுடன் பேச்சு மேற்கொண்டார். அப்போது பிரதமர் மோடி பேசுகையில்,

எனக்குஉற்சாகவரவேற்புக்கொடுத்த சிங்கப்பூருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். பிரதமர் மற்றும் அவரது அமைச்சர்கள் தலைமையின் கீழ், சிங்கப்பூர் மேலும் வளர்ச்சி பெறும்.

சிங்கப்பூர் வெறும் நாடு மட்டும் இல்லை. வளர்ந்து வரும் ஒவ்வொரு நாடுகளுக்கும் ஊக்கமளிக்கும் சக்தியாகவும் சிங்கப்பூர் உள்ளது. இந்தியாவிலும் பல சிங்கப்பூர்களை உருவாக்க நாங்கள் விரும்புகிறோம். இதற்காக இரு தரப்புகளும் இணைந்து பணியாற்றுவது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது." என்றார்.

சிங்கப்பூர் பிரதமருடனான சந்திப்புக்குப் பின்னர் இந்தியா – சிங்கப்பூர் இடையே முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. டிஜிட்டல் தொழில்நுட்பம், தொழில் அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

# எச்சரிக்கை!



"ஷேக் ஹசீனா தொடர்ந்து இந்தியாவில் இருக்க வேண்டுமென்றால் அங்கு இருந்துகொண்டு கருத்துத் தெரிவிப்பது நல்லதல்ல" என பங்களாதேஷின் புதிய தலைவர் முகமது யூனுஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவின் அண்டை நாடான பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட, பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து பங்களாதேஷில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது. இடைக்கால அரசின் தலைவராக முகமது யூனுஸ் உள்ளார்.

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள அவர் எங்கு இருக்கிறார் எனத் தெரியவில்லை. ஆனால், அடிக்கடி அரசியல் கருத்துத் தெரிவித்து வருகிறார். அவர் மீது பங்களாதேஷ் இடைக்கால அரசு கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், தொடர்ந்து அவர் இந்தியாவில் இருக்க விரும்பினால் அமைதியாக இருக்க வேண்டும் என முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முகமது யூனுஸ் கூறுகையில்:–

"பங்களாதேஷ் அரசு அவரை திரும்ப அழைக்கும் வரை, இந்தியா தொடர்ந்து அவரை வைத்திருக்க விரும்பினால், அவர் அமைதியாக இருக்க வேண்டும். இது நிபந்தனையாக இருக்கும்.

இந்தியாவில் இருந்து கருத்துத் தெரிவிப்பது நட்பற்ற சைகையாகும். இந்தியாவில் இருந்து அவர் கருத்துத் தெரிவிப்பது எவருக்கும் வசதியானது அல்ல. ஏனென்றால் அவரை நாங்கள் மீண்டும் பங்களாதேஷுக்குக் கொண்டு வர விரும்புகிறோம். அவர் இந்தியாவில் இருக்கிறார், சில சமயங்களில் அவர் கருத்துத் தெரிவிக்கிறார். இது பிரச்சினையாக இருக்கிறது.

அவர் அமைதியாக இருந்திருந்தால் நாங்கள் மறந்திருப்போம். அவர் தன் சொந்த உலகத்தில் இருக்கிறார் என மக்கள் மறந்திருப்பார்கள். ஆனால் இந்தியாவில் அமர்ந்து கொண்டு, பேசிக் கொண்டு இருப்பதுடன், அறிவுரைகள் கொடுத்து வருகிறார். இது எவருக்கும் பிடிக்காது."

– இவ்வாறு முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 09


# கனடா முரசு

வியாழக்கிழமை 05/09/2024

## 15 வயது சிறுவன் சுட்டுக் கொலை!

கனடாவில் 15 வயதான சிறுவன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் ரொறண்டோ பகுதியில் இந்தச் சம்பவம் 02





# கனடாவில் ட்ரூடோ அரசு எந்நேரத்திலும் கவிழலாம்

## லிபரல் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்குகின்றது புதிய ஜனநாயகக் கட்சி

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 05**

**கனடாவில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வின் சிறுபான்மை லிபரல் அரசாங்கம் எந்த நேரமும் கவிழலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.**

**இதுவரை லிபரல் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வந்த சிறிய அரசியல் கட்சி ஒன்று, தனது ஆதரவை விலக்கிக்கொண்டுள்ளது. கனடாவில் ஜக்மீத் சிங் என்பவர் தலைமையில் இயங்கும் புதிய ஜனநாயகக் கட்சியே தற்போது லிபரல் அரசாங்கத்திற்கு அளித்துவந்த ஆதரவை திரும்பப் பெற்றுள்ளது.**

ஆனால், ஆட்சிக்கு ஆபத்து அல்லது தேர்தல் உருவாகும் சூழல் எதுவும் தற்போது ஏற்பட வாய்ப்பில்லை என்றே அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், பட்ஜெட்டை நிறைவேற்றவும் நம்பிக்கை வாக்கெடுப்பில் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் புதிதாக ஒரு கட்சியின் ஆதரவை ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் பெற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த 2022 முதல் லிபரல் அரசாங்கத்திற்கு அளித்துவந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாக ஜக்மீத் சிங் அறிவித்துள்ளார். தற்போதைய சூழலில் ஜஸ்டின் ட்ரூடோவால் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ்களை எதிர்கொள்ள முடியவில்லை என ஜக்மீத் சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

2025 ஒக்டோபர் இறுதியில் முன்னெடுக்கப்படவிருக்கும் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி மிக எளிதாக வென்றுவிடும் சூழலே தற்போது உள்ளது என்றும் ஜக்மீத் சிங் 02










# திரும்பவும் கனடாவில் வட்டி விகிதம் குறைப்பு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 05

கனடிய மத்திய வங்கியின் வட்டி விகிதம் 4.25 சதவீதமாக குறைந்துள்ளது.

கனடிய மத்திய வங்கி பரவலாக எதிர்பார்க்கப்பட்ட அதன் புதிய வட்டி விகித குறைப்பை நேற்று அறிவித்தது.

ஜூன் மாதத்தின் பின்னர் தொடர்ந்து மூன்றாவது வட்டி விகிதக் குறைப்பை நேற்று மத்திய வங்கி அறிவித்தது.

அண்மையில் பொருள்களின் விலைகள் குறைவடைந்து வரும் நிலையில் இந்த வட்டி வீத குறைப்பு அறிவிக்கப்படுவதாக கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் நாட்டின் பொருளாதாரம் வேகமான வளர்ச்சியை பதிவு செய்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

குறிப்பாக இரண்டாம் காலாண்டு பகுதியில் இவ்வாறு வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் பணவீக்கம் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்தால் வட்டி வீதங்களை மேலும் குறைக்க முடியும் என மதிய வங்கி தெரிவித்துள்ளது.

கனடாவில் தற்பொழுது பணம் வீக்க வீதம் 2.5 வீதமாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வட்டி விகித அறிவிப்பு ஒக்டோபர் 23 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளது

## 15 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெற்றுள்ளது.

வெஸ்டர்ன் காலிகேட் கல்லூரியில் தரம் 11 க்காக பாடசாலை செல்ல காத்திருந்த சிறுவனே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளான்.

பிளாசா பகுதியில் வாகன தரிப்பிடத்தில் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சிறுவன் சிலருடன் முதலில் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சிறுவன் வைத்திய சாலையில் செர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை மேற்கொண்டவர்கள் பற்றிய எவ்வித தகவல்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

ரொறன்டோவில் கடந்த வார இறுதி நாள்களில் 11



துப்பாக் கிச் சூட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் மூன்று பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் கனடிய பொலிஸ் நிலையமொன்றுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

மேலும், லிபரல் கட்சி மிகவும் பலவீனமாக உள்ளது என்றும், அக்கட்சியினர் மிகவும் சுயநலவாதிகள் மற்றும் மக்களுக்காக போராடுவதற்கு பதிலாக பெருநிறுவன நலன்களுக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் உள்ளனர் என்றும் ஜக்மீத் சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டுமின்றி, லிபரல் கட்சியால் இனி மாற்றமாக இருக்க முடியாது என்றும் அவர்களால் இனி நம்பிக்கையை மீட்டெடுக்க முடியாது என்றும் ஜக்மீத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

'இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து விட்டதாக பிரதமரிடம் தெரிவித்தேன்' என ஜெக்மீத் சிங் நேற்று தெரிவித்தார்.

ஜூன் 2022 இல் கையெழுத்தான இந்த இரு தரப்பு ஒப்பந்தம், ஜூன் 2025இல் நிறைவாகவிருந்தது.

சிறுபான்மை அரசில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டது.

நீண்டகால முற்போக்கான கொள்கைகளின் முன்னேற்றத்திற்கு பதிலாக நம்பிக்கை வாக்கெடுப்புகளில் லிபரல் கட்சிக்கு ஆதரவளிக்க இந்த ஒப்பந்தத்தில் புதிய ஜனநாயகக் கட்சி உடன்பட்டது.

பதிலுக்கு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

புதிய ஜனநாயகக் கட்சியின் இந்த ஒப்பந்தம் ஜஸ்டின் ட்ரூடோவின் சிறுபான்மை லிபரல் அரசாங்கத்தை அதிகாரத்தில் வைத்திருக்க உதவியது.

இந்த நிலையில் அந்த ஒப்பந்தத்தில் இருந்து தனது கட்சியை வெளியேறும் முடிவை ஜெக்மீத் சிங் வெளியிட்டார்.

இலையுதிர் கால நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னதாக ஆளும் கட்சியுடன் உறவை துண்டிக்க முடிவு செய்ததாக ஜெக்மீத் சிங் தெரிவித்தார்.

2015 நவம்பர் முதல் ஆட்சியில் இருக்கும் ஜஸ்டின் ட்ரூடோ, தற்போது மிக மோசமான பின்னடைவை சந்திப்பார் என்றே ஆய்வுகளில் தெரிய வருகிறது.

புதிய ஜனநாயகக் கட்சியின் அழுத்தம் காரணமாகவே தேசிய அளவிலான பல் சுகாதார திட்டம் அமுலுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.





# சர்வதேச திரைப்பட விழா இன்று ரொறன்டோவில் ஆரம்பமாகிறது

ஒன்றாரியோ, செப்ரம்பர்05

ரொறன்டோ சர்வதேச திரைப்பட விழா இன்று ஆரம்ப மாகின்றது.

ஹொலிவூட் வேலை நிறுத்தங்கள் காரணமாக கடந்த ஆண்டு பெரும் பாதிப்பை எதிர்கொண்ட ரொறன்டோ சர்வ தேச திரைப்பட விழா இம்முறை மீண்டும் ஆரம்பமாகிறது.

அஞ்சலினா ஜொலி, பரெல் வில்லி யம்ஸ், கேட் பிளங்கெட் ஆகியோர் இம்முறை திரைப்பட விழாவில் பங் கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படும் பிரபலங்களில் சிலராவார்.

இன்று ஆரம்பமாகும் சர்வதேச திரைப்பட விழா, செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நடைபெறுகிறது.












# வெளிநாட்டவர்களின் வருகைக்கு ட்ரூடோ அரசாங்கம் கதவடைப்பு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 05

கனடாவிற்கு வருகை தருவோரின் எண்ணிக்கையை ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் கணிசமாக குறைத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. கனடாவில் உரிய ஆவணங்களுடன் அதிகாரிகளை நாடினாலும் அதிக எண்ணிக்கையிலான மக்களை அங்குள்ள நிர்வாகம் திருப்பி அனுப்புவதாக கூறப்படுகிறது. அத்துடன் பயணிகள் மற்றும் தற்காலிக குடியிருப்பாளர்களுக்கான விசா அனுமதிப்பதும் குறைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன் பின்னணியில் ஜஸ்டின் ட்ரூடோவின் அரசியல் ஆதாயம் இருப்பதாக கூறுகின்றனர். லிபரல் அரசாங்கம் கனேடிய மக்களின் ஆதரவை இழந்து வருவதாக வெளியான தகவலை அடுத்தே அதிகமாக வெளிநாட்டு பயணிகளுக்கான விசா மறுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

கனடாவில் குடியிருப்பு பற்றாக்குறை மற்றும் குடியிருப்புகளுக்கான விலை உயர்வுக்குக் காரணம் புலம்பெயர்ந்தோர் எனக் குற்றஞ்சாட்டப்படும் நிலையிலேயே ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

பொதுவாக புலம்பெயர் மக்களை ஆதரிக்கும் சமூகமாக கனேடியர்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். ஆனால் சமீபத்தில் வெளியான கருத்துக்கணிப்பில், அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர் மக்களை அனுமதித்துள்ளதாக கனேடியர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாகவே, அதிகாரிகள் தரப்பு தற்போது நடவடிக்கை முன்னெடுத்து வருவதாக கூறப்படுகிறது. கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 5,853 வெளிநாட்டவர்களுக்கு கனடா விசா மறுத்துள்ளது.

அத்துடன் ஆண்டு பிறந்து முதல் 7 மாதங்களில் சராசரியாக ஒவ்வொரு மாதமும் 3,727 வெளிநாட்டவர்களுக்கு கனடா அனுமதி மறுத்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 20 சதவிகிதம் அதிகம் என்றே கூறப்படுகிறது.

மேலும், கனேடிய விசா வைத்திருக்கும் 285 வெளிநாட்டவர்களுக்கு ஜூலை மாதம் அனுமதி மறுத்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதற்கு கொள்கை மாற்றம் உட்பட பல்வேறு காரணங்கள் கூறப்படுக்கிறது.

இதேவேளை, கனடாவில் குடியேறும் மக்களுக்கான விசாவும் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் visitor visa விண்ணப்பங்களும் அதிக எண்ணிக்கையில் நிராகரிக்கப்பட்டுள்ளன. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கல்வி மற்றும் வேலை விசாவும் அதிக எண்ணிக்கையில் மறுக்கப்பட்டுள்ளன.





# மூன்று வாரத்தில் இரண்டு தடவைகள் களவாடப்பட்ட வாகனம் மீட்கப்பட்டது

கனடாவின் வின்னிபெக் பகுதியில் 3 வார கால இடைவெளியில் இரண்டு தடவைகள் களவாடப்பட்ட வாகனம் இரண்டு தடவையும் வெற்றிகரமாக மீட்கப்பட்டுள்ளது.

செயின்ட் பால்ஸ் பகுதியில் சேர்ந்த பெண் ஒருவரின் வாகனமே இவ்வாறு 3 வார கால இடைவெளியில் இரண்டு தடவைகள் களவாடப்பட்டதாக அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

எமிலியா நவுஸ்கீ என்ற பெண்ணின் வாகனமே இவ்வாறு களவாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மானிடோபா பல்கலைக்கழக மாணவர் வாகன தரிப்பிடத்தில் முதல் தடவை வாகனம் களவாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்த வாகனம் பின்னர் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தில், அது களவாடப்பட்டால் அதனை அடையாளம் காணும் கருவி ஒன்றைஉரிமையாளர் பொருத்தியுள்ளார்.

எவ்வாறெனினும், மூன்று வார கால இடைவெளியில் மீண்டும் வாகனம் களவாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கருவியின் உதவியுடன் முன்னதாக கார் களவாடப்பட்டு மீட்கப்பட்ட ஸ்டிலாவாட் பகுதியில் மீண்டும் இந்த வாகனத்தை கண்டு பிடித்ததாக அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

இந்த வாகனத்தில் மதுபானம் மற்றும் துப்பாக்கி தோட்டா களஞ்சியப்படுத்தும் பெட்டி ஒன்று என்பன காணப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாகனங்கள் பல தடவைகள் களவாடப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# 2002 இல் புரிந்த குற்றத்துக்கு இப்போதுமாட்டியுள்ள ஆசிரியர்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் கலிடான் பகுதியில் 64 வயதான ஆசிரியர் ஒருவர், மாணவர் ஒருவரை தகாத செயலுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஒன்றாறியோ மாகாணப் பொலிஸார் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு இந்த சம்பவம் இடம்பெற்றதாகவும் 2022 ஆம் ஆண்டு சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

64 வயதான டோனிக் க்ரீக் பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு எதிராக இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 16 வயதிற்கும் குறைந்த பாடசாலை மாணவர் பாலியல் ரீதியாக துன்பப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றம் சுமத்தப்பட்ட ஆசிரியர் கடந்த ஜூன் மாதம் வரையில் ஆசிரியர் சேவையில் ஈடுபட்டிருந்தார் எனவுன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பாடசாலை ஆசிரியர் கடந்த 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.




இந்த சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் இருந்தால் அறிவிக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# ட்ரூடோவைப் பதவி விலக வலுக்கின்றது வற்புறுத்தல்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 5

எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லியெவ் தேர்தலில் வெற்றி பெறுவதைத் தடுக்க ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

LGBTQ+ ஆர்வலர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மக்கள் ஆதரவு குறைந்து வரும் நிலையில், அடுத்த தேர்தல் வரை லிபரல் கட்சியின் தலைவராக நீடிக்க பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எடுத்துள்ள நிலைப்பாடு தங்களை ஆபத்தில் ஆழ்த்துகிறது என LGBTQ+ ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

பியர் பொய்லியெவ் தலைமையிலான கன்சர்வேட்டிவ் அரசாங்கம் LGBTQ+ சமூகத்திற்கு ஆபத்தானது என விசித்திரமான உறவுகள் தொடர்பான ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

அடுத்த தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற ஒரு சிறந்த வாய்ப்பை வழங்க ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக வேண்டும் என அவர்கள் அழைப்பு விடுக்கின்றனர். அடுத்த பொதுத் தேர்தல் ஒக்டோபர் 20, 2025க்கு முன்னர் நடைபெறவேண்டும்என்பதுகுறிப்பிடத்தக்கது.




# 2 ஆசிரியர்கள், 2 மாணவர்களை சுட்டுக்கொன்ற 14 வயது மாணவர்

## மேலும் நால்வருக்குக் காயம்; ஜார்ஜியாவில் சம்பவம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 05

ஜார்ஜியா உயர்நிலைப் பாடசாலையில் நேற்று 14 வயது மாணவர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தி நான்கு பேரைக் கொன்றார்.

இறந்தவர்கள் அட்லாண்டாவிலிருந்து ஒரு மணி நேர பயணத்தில் விண்டரில் உள்ள அபலாச்சி உயர்நிலைப் பாடசாலையில் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

குறைந்தது ஒன்பது பேர் - எட்டு மாணவர்கள் மற்றும் ஒரு ஆசிரியர் - காயங்களுடன் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சந்தேகத்திற்குரிய பாடசாலை மாணவன், உடனடியாக சரணடைந்தார். அவர் காவலில் வைக்கப்பட்டார். அவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.





# மரதன் ஓட்டப் போட்டிகளை ஒட்டி இணைய வழியில் மோசடிகளாம்!

## கனடாவில் எச்சரிக்கை

கனடாவின் பல்வேறு பகுதிகளில் மரதன் ஓட்டப் போட்டிகள் பிரபல்யம் அடைந்து வரும் நிலையில் இந்த போட்டிகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மரதன் ஓட்டப் போட்டியை அடிப் படையாகக் கொண்டு இணைய வழி யில் மோசடிகள் இடம் பெறுகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மரதன் ஓட்டப் போட்டிக ளில் பங்கேற்கும் நபர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனைச் சந்தர்ப்பமாக பயன் படுத்தி மக்களிடம் மோசடி செய்யும் கும்பல்கள் களத்தில் இறங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மரதன் ஓட்டப் போட்டிகளில் பங் கேற்காத புதியவர்கள் இந்த மோசடி வலையில் சிக்கும் சாத்தியம் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக ஊடகங்களின் வாயிலாக மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்ப வர்கள் ஏமாற்றப்படுகின்றனர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மரதன் ஓட்டப் போட்டியில் பங் கேற்பதற்காக மோசடியான நபர்களி டம் சிலர் பணத்தை கொடுத்து ஏமாற்றமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பில் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே மக்கள் போதிய அளவு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

# இரு சந்தேகநபர்களுக்கு எதிராக மனிதக் கடத்தல் குற்றச்சாட்டுகள்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 05

கிழக்கு ஒன்டாரியோவில் தொடங்கிய 10 மாத கால விசாரணையைத் தொடர்ந்து பல்வேறு மனித கடத்தல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் இரண்டு நபர்களில் பிறம்டனைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செப்டம்பரில், விசேட குழுவொன்று மனித கடத்தல் சந்தேகத்திற்குரிய அறிக்கைகளை விசாரிக்க திட்ட நெபுலாவை அறிமுகப்படுத்தியது.

கிங்ஸ்டன், ஒட்டாவா, பீல், டொராண்டோ, வின்ட்சர் மற்றும் யோர்க் பொலிஸார் இணைந்து இந்த விசார ணையை முன்னெடுத்தனர்.

கண்டுபிடிக்கப்பட்ட கடத்தல் நடவடிக்கைகள் கிழக்கு ஒன்றாரியோவிற்கு அப்பால் சென்று, தெற்கு ஒன்றா ரியோ, கியூபெக் மற்றும் நோவா ஸ்கோடியா வரை பதிவானதை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

ப்ராஜெக்ட் நெபுலா மூலம் பாதிக்கப்பட்ட மூன்று பெண்களை இந்த விசேட பிரிவு கண்டறிந்தது.

அதன் விளைவாக பிறம்டனைச் சேர்ந்த 45 வயது டையவர் மற்றும் சிட்னியைச் சேர்ந்த 33 வயதான ஒருவர் என இரண்டு நபர்களை கைது செய்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மொத்தம் 36 குற்றச் சாட்டுகளை எதிர்கொள்கின்றனர், அவற்றில் 17 மனித கடத்தல் குற்றச்சாட்டுகளாகும்.






# கனடிய எல்லைப் பகுதிகளில் தீவிர கெடுபிடி நடவடிக்கைகள்

கனடாவின் எல்லைப் பகுதிகளில் வெளிநாட்டு பயணிகள் தொடர்பில் கடுமையான சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எல்லை பகுதிகளில் ஊடாக கனடாவிற்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டு பயணிகள் தொடர்பில் கூடுதல் சோதனை நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய எல்லைப் பாதுகாப்புச் சேவை முகவர் நிறுவனம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

கனடாவிற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் வெளிநாட்டவர்கள் பலர் திருப்பி அனுப்பப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குடிவரவு விவகாரங்கள் தொடர்பில் கனடிய மத்திய அரசாங்கம் மீது அண்மைய நாள்களாக விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எல்லைப் பகுதிகளில் வெளிநாட்டு பிரஜைகள் உட்பிரவேசிப்பது கடுமையாக்கப்பட்டுள்ளது.

உரிய ஆவணங்களின்றி நாட்டுக்குள் பிரவேசிப்பவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மாத காலப்பகுதியில் சராசரியாக சுமார் 4,000 வெளிநாட்டு பயணிகள், கனடிய எல்லை பகுதிகளில் இருந்து திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பழைய கொவிட் - 19 தடுப்பூசிகளை அழித்து விடக் கனடிய அரசு உத்தரவு

கொவிட் தடுப்பூசி பயன்பாடு தொடர்பில் கனடிய அரசாங்கம் மாகாணங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. பழைய கொவிட் 19 தடுப்பூசிகளை அழித்து விடுமாறு அதுஅறிவித்துள்ளது.

கனடிய சுகாதாரத் திணைக்களம் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. புதிய தடுப்பூசிகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றின் புதிய திரிபுகளுக்கு சிகிச்சை அளிக்க கூடிய தடுப்பூசிகள் வழங்கப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மைய நாள்களாக நாட்டில் கொவிட் 19 பெருந்தொற்று வேகமாக பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கழிவு நீர் மாதிரிகளில் நடத்தப்பட்ட சோதனைகளின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.



அனைத்து மாகாணங்களிலும் பழைய தடுப்பூசிகளை அழித்து விடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள் அனைத்து மாகாணங்களுக்கும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது



# கனடாவில் பஞ்சாப் பாடகரின் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடுகள்

பாலிவுட் நட்சத்திரம் சல்மான் கானுடன் இணைந்து பாடல் காணொலியொன்றில் தோன்றிய பாடகரின் கனடிய வீட்டின் மீது திங்கட்கிழமை அதிகாலை வேளையில் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் விக்டோரியா பகுதியில் அமைந்துள்ள ஏ.பீ டில்லோன் என்ற இந்திய - கனடிய பஞ்சாப் பாடகரின் வீட்டின் மீது இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பிரிட்டிஷ் கொலம்பிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்த வீட்டில் சுமார் 14 துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பாடகருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை எனவும் கூறப்பட்டது.

தமக்கோ தமது குடும்பத்தினருக்கோ எவ்வித பாதிப்பும் கிடையாது என பாடகர் டில்லோன் சமூக ஊடகங்களின் ஊடாக தெரிவித்துள்ளார்.

தம் மீது கரிசனை கொண்டு தமக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுகின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த சம்பவம் தொடர்பில் கனடிய பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

திட்டமிட்ட அடிப்படையில் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு இந்தியாவை மையமாகக் கொண்ட லோரன்ஸ் பிசியோனி என்ற கும்பல் உரிமை கோரி உள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரபல பாலிவுட் நடிகர் சல்மான் கானுடன் இணைந்து பாடல் ஒன்றை பாடியதன் எதிரொலியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.







